

# FRIDAY SERMON

**08 FEBRUARY 2019**

**(02 JAMADI'UL AAKHIR 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## "Service to MANKIND is the Greatest Spiritual Practice"

## "மனிதகுல சேவைதான் மிகச் சிறந்த ஆன்மீக செயல்"

**TAMIL VERSION /** தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவுசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

பின்வரும் ஒரு வெளிப்பாடு வாக்கியமானது இந்நூற்றாண்டின் இறை அத்தாட்சியின் ஆரம்பகட்டத்தில் அதாவது 2004 ஏப்ரல் 9-ம் தேதியன்று அல்லாஹ்விடமிருந்து நான் பெற்றுக்கொண்டதாகும். அது ஜமா அத்து அஹ்மதியா அல்முஸ்லிமீனின் ஆரம்பகட்டமாக இருந்து. இன்று, இறை அறிவிப்பினையொட்டி உலகெங்குமுள்ள எனது தோழர்களை நான் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிய உறுப்பினர்கள் என அழைக்கின்றேன். அதாவது

அதே அறிவூட்டும் முத்துக்கள், அறிவுரைகள் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றுடன் நான் இன்று உங்களை ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைசான்றோர்கள் என அழைக்கின்றேன்.

**SERVICE TO MANKIND IS THE GREAT SPIRITUAL PRACTICE**

**"மனித குலசேவையே மிக சிறந்த ஆன்மீக செயல்"**

புது வருடத்தைக் குறித்து, இன்றைய மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கின்றனர். புது வருடம் வந்தடையும் போது அதாவது புது வருட கொண்டாட்டத்திற்கு மக்கள் மிக அதிகமாக செல்வங்களை செலவுசெய்கின்றனர்.

ஒரு வருடத்தில் ஒரு குறிப்பான நாளினை கொண்டாட்டத்திற்காக தேர்வு செய்வது முற்றிலும் அறியாமையின் அடையாளமாகிறது. ஒரு உண்மையானபக்தரை பொறுத்தவரையில் அவருக்கு எல்லா தினவும் கொண்டாடம்தான். ஒருதரத்தில் எல்லா நாட்களும் புது வருட தினமாகும். எனவே, நாம் எல்லா தினங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் ஒவ்வொரு நிமிடங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கடந்து வரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் புதியது என எண்ணி நாம் மகிழ்சிசியுடன் கொண்டாடவேண்டும்.

முற்றிலும் சிறந்த ஆன்மீக செயல் என்பது மனிட குலத்திற்கு சேவை புரிதலாகும். இந்த வெளிப்படையான உலகில் உள்ள அனைத்தும் தற்காலிகம் மற்றும் உண்மையற்றவை ஆகும். உண்மையானது எது, நித்தியமானது எது என்பதை குறித்து மனிதன் மிக ஆழமாக சிந்திக்க வேண்டும். ஆனால் மனிதன் தனது அறியாமையால், கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் எண்ணி கவலைப்படுகின்றான். அதன் விளைவாக தனது விலைவாய்ந்த நேரத்தை இழக்கின்றான். தனது நிகழ்காலத்தைப் பற்றி சிந்திகாமலும் இருக்கிறான். நிகழ்காலம் மட்டுமே உண்மையாக உள்ளது. கடந்த காலம், நம்மை விட்டு சென்றது, அதனை ஒரு போது உங்களுக்கு திரும்ப பெற இயலாது. ஆகவே நிகழ்காலம் மட்டும்தான் உண்மையாக இருக்கிறது. கடந்த காலத்தைக்குறித்து

சிந்தித்து கவலையடைவதற்கு பதிலாக நீங்கள் இந்த நிகழ்காலத்தில் உங்கள் சக உயிரினங்களுக்கு நன்மை செய்யும் செயல்களில் மூழ்கியிருங்கள். மனித குல சேவை மட்டும் தான் ஆன்மீக செயல்களில் முற்றிலும் சிறந்தது. ஆகவே நீங்கள் எந்நேரமும் சக உயிரினங்களுடைய சேவையில் மூழ்கியிருங்கள். இதைவிட உயர்ந்த ஆன்மீக செயல் வேறு எதுவுமில்லை. மக்கள், சேவைசெய்வதன் மகத்துவத்தை முழுமையாக மறந்து விட்டனர். சேவை செய்வதன் பலன் மட்டுமே என்றென்றும் நிலைத்திருப்பது என அவர்கள் பகுத்தறிய வேண்டும். பிறருக்கு சேவை புரிவதற்கே இறைவன் நமக்கு உடலை அளித்திருக்கின்றான். அல்லாமல் புசிப்பதற்கும், அருந்துவதற்கும், பௌதீக காரியங்களில் ஈடுப்பட்டு நம் விலை வாய்ந்த நேரத்தை இழப்பதற்கும் அல்ல. ஒரு உண்மையைப்பற்றி நாம் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கவேண்டும். அதாவது மிக மதிப்பு மிக்க நம் செயல்கள் என்பது, பிறருக்கான சேவையாகும். மானிடகுலத்திற்கு சேவை புரிவதைவிட சிறந்த வேறொன்று இல்லை. எல்லா உயர்ந்த மனிதர்களும் தங்கள் வாழ்கையினை சேவை செய்வதற்காகவே மாற்றி வைத்தனர். எனவே நீங்கள் சமுதாயத்தின் சேவையில் தொடர்ந்து ஈடுபடுங்கள். எல்லா விதமான ஆன்மீக செயல்களிலும் வைத்து முற்றிலும் சிறந்ததும் மகத்துவம் வாய்ந்தது மனித குலத்திற்கு சேவைசெய்தலாகும். உங்களின் கருத்துப்படி, சேவை என்றால் என்ன? பிறமக்களின் கவலை மற்றும் வேதனைகளில் அவர்களுக்கு உதவி செய்வதுதான் சேவை என நீங்கள் நினைக்கின்றீர்கள். அதை போன்று ஒரு எளிதான காரியமல்ல இது. பிறருக்கு சேவை புரிவதில் நீங்கள் உறுதியுடன் இருக்கும் நிலையினை அடைய வேண்டும். மனித உடலின் அமைப்பு, அநேக உறுப்புகளை கொண்டாகும். ஒவ்வொரு உறுப்புகளும் அதன் வேலையை செய்ய வேண்டும் என்பது நிச்சயிக்கபட்டதாகும். துரதிஷ்டவசமாக, இந்த அடிப்படை தத்துவத்தை நாம் மறந்துவிட்டோம். உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஒரு வழிபாடு என்ற நிலையில் செயல்களில் ஈடுபட்டவாறு இருக்க வேண்டும். அந்த செயல்கள் மூலம்தான் மனித வாழ்கையினை பாதுகாக்க முடியும். நாம் பெரிய பள்ளிவாயிலை கட்டுகின்றோம். பல்வகையான ஆன்மீக வேலைகளில் ஈடுபடுக்கின்றோம். ஆனால் இவை அனைத்தும் தற்காலிகமான மகிழ்ச்சியனை மட்டுமே வழங்குகிறது. இவை நித்தியமான மகிழ்ச்சியினை வழங்குவதில்லை. எனவே மனித குல சேவை வழியாகத்தான் நித்தியமான மகிழ்ச்சியினை பெற முடியும் என்ற உண்மையை

உங்களிடம் வளர்க்க வேண்டும். அதில் நீங்கள் வலுவான நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். துன்பங்களால் அவதிப்படும் மானிட குலத்திற்கு சேவை புரியும் பணிகளில் ஈடுப்படுங்கள். சேவை என்பது சுகாதாரப்பாதுகாப்பு மட்டுமல்ல சேவை என்பதில் சக மனிதர்களுக்கு நம்மால் சாத்தியமான அனைத்து உதவிகளும் உட்படுகின்றது.

உன்னத பண்புகளாகிய தியாகம், அன்பு, உண்மை ஆகியவற்றை நீங்கள் உள்ளீர்த்துக் கொள்ளுங்கள். இப்பண்புகள் வழியாகத்தான் தெய்வீகமான உன்னத நிலைகளை அடைய முடியும். உங்கள் முன்னிலையிலுள்ள தேவையுடையவரை நீங்கள் நேசித்துக் கொள்ளுங்கள். அவரிடம் இரக்கத்துடன் இனிமையுடனும் பேசுங்கள். உங்களுக்கு இயன்ற நிலையில் அவருக்கு எல்லா உதவிகளும் செய்யுங்கள். இதுவே உண்மையான ஆன்மீக செயல். இதை விட சிறந்த ஆன்மீக செயல் வேறு எதுவுமில்லை. எவர் ஒருவர் தனது முழு வாழ்கையையும் தியாகம் செய்வதற்கு தயாராகி விட்டால் அவர் முற்றிலும் சிறந்த அருளுக்குரிய ஆன்மாவின் உரிமையாளராக பரிணமித்து விடுவார்.

ஒவ்வொரு நபரையும் மதித்து நடந்துக் கொள்ள வேண்டும், அவர்களிடம் அன்புடன் பேச வேண்டும். ஒவ்வொரு மனிதனும் பிற மக்கள் தங்களை மதிக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் பிற மக்களை மதிப்பதில்லை. நீங்கள் பிற மக்களை மதிக்காமல், பிறமக்கள் உங்களை மதிக்க வேண்டும் என எண்ணுவதில் என்ன நியாயம்? உங்களுக்கு மனித வடிவத்தை அளித்து, அவன் கண்ணிப்படுத்திருக்கின்றான். எனவே நீங்கள் ஒரு மனித உயிரினம் என்ற நிலையில் மதிப்பை வழங்கி, மதிப்பை பெற்றுக் கொள்ளுங்கள். இந்த கட்டத்தில் நீங்கள் பெற வேண்டிய மிக சிறந்த பண்பு இதுவாகும்.

கிராமவாசிகள் பழங்கால கலாச்சாரங்களை இன்றும் பாதுகாக்கின்றனர். ஆனால் நகரங்களின் நிலை மற்றொன்று! ஆகவே எனது முஹைத்தீன்." நீங்கள் கிராமங்களை நோக்கி செல்லுங்கள். உங்களின் வருடாந்திர மாநாடுகள் மார்க்கத்தொடர்பான நிகழ்ச்சிகள் (செயல்முறைதிட்டங்கள்) மற்றும் ஆன்மீக ஒன்று கூடுதல்களை அங்கு அமைத்துக் கொள்ளுங்கள். அவர்களிடத்தில் நீங்கள் செல்லுங்கள். கிராமவாசிகளின் கவலைகள் என்ன என்பதை கண்டுகொள்ளுங்கள். அவர்களின் கவலைகளுக்கு தீர்வு காணுவதற்கான

முயற்ச்சிகளில் ஈடுபடுங்கள். இன்று அநேக மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அது சுகம் மற்றும் ஆடம்பரங்களை தேடி செல்லும் பயணமாகும். இந்த செயல்பாடு மூலம் தங்களது துன்பம் மற்றும் சிரமங்களிலிருந்து மீட்சியினை பெறலாம் என அவர்கள் எண்ணுகின்றனர். உண்மையில் சுகம் மற்றும் ஆடம்பரங்களை தேடி செல்லும் இத்தகைய பயணமானது, மனிதனை மேலும் குழப்பங்களின் பால் அழைத்து செல்லுகிறது.

**"Happiness Cannot be Obtained out of happiness"**

**"சந்தோஷத்தை மகிழ்ச்சியிலிருந்தே பெற முடியும்."**

துன்பம் மற்றும் தியாகங்கள் வழியாக மட்டுமே மகிழ்ச்சியினை அடைய முடியும். ஆகவே நீங்கள் சேவை என்னும் பாதையினை நோக்கி பயணம் மேற்கொள்ளுங்கள் சுருக்கமாக கூறுவோமேயானால் அவன் உங்களக்கு கரங்களை தந்து அருளியிருப்பது மானிட குலத்திற்கு சேவை புரிவதற்காகும். கவலைகளால் அவதிபட்டவாறு உதவியினை தேடும் மனிதர்களுக்கு சேவை புரிவதற்காகும். கவலைகளால் அவதிபட்டவாறு உதவியனை தேடும் மனிதர்களுக்கு சேவை புரிந்தால் நீங்கள் மகிமை அடைவீர்கள். நல்ல செயல்களில் ஈடுபட்டு முன்செல்லும் பொழுது, நீங்கள் உங்களின் வாழ்கையில் சாந்தியினை அடைவீர்கள். சடங்கு சம்பந்தமான வாழிபாடுகளில் இறைவனுக்கு ஆர்வமில்லை. சேவை செய்வதில் ஈடுபட்டு முன்செல்லும் பொழுதே இறைவன் உங்கள் மீது மகிழ்ச்சி அடைவான். ஆகவே நீங்கள் மேன்மேலும் சேவைகள் புரியுங்கள். எல்லா மக்களையும் நேசித்து அவர்களுக்கு சேவை புரிவதே இறைவன் உங்களை நேசிப்பதற்கான மிக சிறந்த வழி. எல்லோரையும் நேசித்து, அவர்களுக்கு சேவை புரிந்து நீங்கள் முன்செல்லும் பொழுதுதான் இறைவன் உங்களை நேசிப்பான். இந்த இரண்டு தத்துவங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்து விட்டால், இதற்கு ஏற்றவாறு செயல்பட்டுவிட்டால் இதை விட பெரிய வேறு எந்த ஆன்மீக செயலும் இல்லை என்பதை நீங்கள் பகுத்தறிந்து விடுவீர்கள்.

சேவை செய்வதற்கு நீங்கள் எந்த ஒரு செல்வத்தையும் செலவு செய்ய வேண்டாம். உங்களின் வாழ்கையினை தூய்மைப்படுத்துங்கள். பின்னர் நீங்கள்

அன்பு என்னும் சேவையில் மூழ்கிவிடுங்கள். பொருளாதார தியாகம் செய்வதில் மிக அதிகமான சிரமங்களை ஜமா அத்துச் சாஹீஹில் இஸ்லாமின் தொண்டர்கள் சந்தித்து வருகின்றனர். அநேகமான அமைப்புகள் தங்களுக்கு கிடைக்கும் பணத்தினை வங்கிகளில் பத்திரப்படுத்தி வைததுக்கொள்கின்றனர். அதிலிருந்து பெறும் வட்டி மூலம் சேவைகள் புரிந்து வருகின்றனர். பணத்திற்கு உன்னதமான குணங்களை வளர்ப்பதற்கான உதவியினை செய்ய முடியாது தியாகங்கள் மூலம் மட்டுமே என்றென்றும் நிலைத்திருக்கும் புகழை பெற முடியும் என கூறப்படுகிறது. இன்று மனிதன் தனது உடல் விருப்பங்களை தேடி செல்கிறார். உடல மற்றும் உலக விருப்பங்களை தேடி செல்வதன் மூலம் மனிதன் இறை எண்ணத்தின் பால் அல்ல, மாறாக நோய்களின் பால் சென்றடைகின்றான். அதனால் நீங்கள் தியாகங்கள் வழியாக இறை எண்ணத்தை பெற முயற்ச்சி செய்யுங்கள் அந்நிலையில் மட்டுமே நித்தியமான அமைதியினை அடைய முடியும். எல்லா உயிரனங்களிலும் இறைவன் நிலை கொள்பவனாக இருக்கின்றான்.

இறைவனைப்பற்றி சிந்திப்பதன் மூலம்தான் மனநிறைவை நீங்கள் அடைவீர்கள். இதனை நீங்கள் அனுபவிக்க வேண்டுமென்றால், இறைவன் ஒவ்வொரு உயிரனத்திலும் நிலைகொள்கிறான் என்பதை நீங்கள் உணர வேண்டும். முழுபிரபஞ்சத்திலும் இறைவன் ஊடுருவியிருக்கின்றான். இறைவன் ஏதேனும் கோவில் அல்லது மசூதியில் மட்டுமாக இருப்பவனல்ல. உடல் ஒரு கோவில் ஆகிறது. அல்லது மசூதியாகிறது. அதில் இறைவன் குடிகொள்பவனாக இருக்கின்றான். இறைவனின் உண்மையான கோவில் அல்லது மசூதி உடல் ஆகிறது. நம் இதயம் என்னும் அக்கோவில் இறைவனை குடியிருத்த வேண்டும். இதயம் இரக்கத்தை கொண்டு நிறைவுபெற்றிருக்க வேண்டும். இதயம் கருணையால் நிரம்பியிருக்க வேண்டும். கருணையினைக் கொண்டு மேன்மேலும் இதயத்தை குவித்துக்கொள்ள வேண்டும். கருணை நிறைந்த இதயத்துடன் நாம் புரியும் சேவைகள்யாவும் சிறந்த மதிப்பீடுகளைக் கொண்டவையாக இருக்கும். ஒவ்வொரு மனித உடலும் இறை வாசத்தின் எல்லையாக இருக்க வேண்டும். இறைவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றான்.

இத்தகைய ஒரு உடலை நம்புவதன் மூலம் நீங்கள் எதை அடைவீர்கள்? அவ்வுடல் மூலம் நீங்கள் பாவங்களை மட்டுமே குவித்துக்கொள்வீர்கள். ஆகவே

பிறருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே உங்களின் உடலின் இலக்காக இருக்கவேண்டும்.

இந்த உண்மையின் மீது வலுவான நம்பிக்கையினை நீங்கள் வளர்த்துக்கொள்ளுங்கள். உண்மையை கூறினால், அதாவது இந்த மனித உடல் மூலம் நீங்கள் எந்த மகிழ்ச்சியை பெற்றாலும் அவையனைத்தையும் நீங்கள் தவிர்த்து கொள்ளும் நிலை உருவாகும். மட்டுமல்ல இந்த உடல் கூட உங்களை விட்டு செல்லும் ஏதேனும் ஒரு நாளில் அல்லது சில நொடியில்! இந்த தாற்காலிக இன்பத்திற்காக இவ்வளவு சிரமம் மற்றும் சோதனைகளை அனுபவிக்க வேண்டுமா? ஒவ்வொரு மனிதனிலுமுள்ள ஆன்மாவை நீங்கள் மதித்துக் கொள்ளுங்கள். இதுவே உண்மையான மனித சேவை. அப்பொழுது உங்களின் வாழ்கையில் ஒவ்வொரு தினமும் கொண்டாட்டமாக அமையும் உங்கள் வாழ்க்கை முழுவதும் கொண்டாட்டத்தால் நிறையும். மாறாக, வருடத்தில் ஒருமுறை மட்டும் நீங்கள் சேவை செய்தால், அதனை உண்மையான சேவை என கூற இயலாது. உங்கள் உடலை மண்ணிலிருந்து படைக்கப்படிக்கின்றது. மனித வாழ்க்கை என்பது நிகரற்ற ஒன்றாகும். ஏனெனில் அதில் இறைவன் குடிகொள்கின்றான். சிறப்பாக உங்களுக்குள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இறைத்தன்மையினை நீங்கள் பகுத்தறிய வேண்டும்.

**“எனது முஹைத்தீன் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களிடம் கூறுங்கள். அவர்கள் தங்களது மக்களுக்கு நன்நடத்தை குணங்களை கற்பித்து கொள்ளட்டும். வாழ்க்கையில் சிறந்த நிலையினை அடைய அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளட்டும். அதுமூலம், அவர்கள் தங்களது பெற்றோர்களுக்கு நற்பெயரினை கொண்டுவரட்டும். பணத்தால் நற்பெயரினை வரவழைக்க முடியாது. அவரது சிறந்ததன்மை வழியாகத்தான் மேன்மையினை அடைய முடியும். ஒருவர் எந்த அளவு பணம்படைத்தவராக இருந்தாலும் சரி, அதில் எந்த பலனுமில்லை. அவர் சிறந்ததன்மை இல்லாதவராக இருந்தால் தனது புகழ் அழிந்துவிடும். செல்வந்தாராகிய ஒருவர் ஒரு மாளிகையில் வசிக்கலாம். வாழ்கையில் அனைத்து விதமான ஆடம்பரங்களிலும் அவர் மூழ்கிவிடலாம். ஆனால் இவையாவும் அவரது மனதிற்கு மகிழ்ச்சி மற்றும் அமைதியினை வழங்குவதில்லை. மனிதர் மேலும் மேலும் செல்வங்களை சேர்பதற்கானமுயற்சிகளில் ஈடுபடுகின்றான் ஆனால்**

**அவர்கள் சேர்க்கும் இந்த செல்வங்களைக் கொண்டு என்ன பயன்? அவர்கள் தங்களது செல்வங்களையாவும் பயனற்ற வழிகளில் செலவு செய்கின்றனர். அச்செல்வங்களை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் நற்செயல்களுக்காகவும் செலவு செய்ய வேண்டும். நற்குணம் மற்றும் நன்னடத்தையினை சுயம் அவர்கள் பெறவேண்டும். அப்பொழுது மட்டுமே வாழ்கையில் உண்மையான அமைதியினை அடைய முடியும். நீங்கள் செல்வங்களுக்கு அடிமையாக கூடாது".**

உண்மையில், இன்று எல்லோரும் அமைதிக்காக மன்றாடுகின்றனர். ஆனால் அமைதி எங்கே? ஆம் அமைதி உங்களுக்குள்யே இருக்கிறது. ஆனால் உங்களின் சமாதானம் மற்றும் மகிழ்ச்சியினை நீங்களே இழக்கின்றீர்கள். பின்னர் நீங்கள் வெளி உலகில் அதனை தேடுகின்றீர்கள். நீங்கள் எந்த அளவு நற்குணங்களை வாழ்கையில் செயல்படுத்திக்காட்டுகின்றீர்களோ, அந்த அளவு அது வளர்ச்சியினை அடைகிறது. வாழ்க்கையில் செல்வமல்ல முக்கியமானது மாறாக, வாழ்க்கையில் மிக முக்கிமானது நற்குணமாகும்.

நீங்கள் உயர்ந்த கல்வியினை பெற்றுள்ளீர்கள். மேன்மேலும் செல்வங்களை சேர்பத்தாக அக்கல்வியினை பயன்படுத்தலாம். ஆனால் கல்வியின் இலக்கு இதல்ல. நீங்கள் இறைவனுக்கு அடிமையாகி விடுங்கள் செல்வத்திற்கு அடிமையாகி விடாதீர்கள். முற்றிலும் சிறந்த காரியம், இறைவனுக்கு அடிமையாக இருப்பதுதான். செல்வம் நிச்சயமாக, ஓரளவுவரையில் அவசியம்தான். ஆனால் நீங்கள் அந்த செல்வதத்திற்கு அடிமையாகி விட்டால், அதன்மூலம் நீங்கள் உங்களின் அழிவுக்குதான் வழி வகுக்கின்றீர்கள். அதிகமான செல்வம் உங்களின் அமைதியினை இழக்கவைக்கிறது. ஆகவே நீங்கள் அன்பு என்னும் செல்வத்தையும் பெற முயற்சி செய்யுங்கள். வங்கியில் நீங்கள் அதிக பணத்தை சேமித்து வைப்பதன் மூலம் எந்த இலக்கையும் அடைய முடியாது. உங்களுக்கு அது எந்த நன்மையும் வழங்காது. நீங்கள் இவ்வுலகினை விட்டு செல்லும் போது, அதிலிருந்து ஒரு ரூபாவைக்கூட திரும்ப பெற உங்களுக்கு முடியாது.

தியாகத்திற்கு மட்டுமே அமைதி மற்றும் திருப்தியினை வழங்க முடியும் செல்வத்திற்கும் ஆடம்பரத்திற்கும் அதனை வழங்க முடியாது. நீங்கள் இவ்வுலகை விட்டு செல்லும் போது உங்கள் அனைத்து செல்வங்களையும்

விட்டு செல்வீர்கள். அதனால் செல்வத்தின் மீது நீங்கள் ஆர்வம் காட்டாமலிருங்கள். நீங்கள் அன்பு மற்றும் அறிவு என்னும் செல்வத்தை பெற ஆர்வம் காட்டுங்கள். இந்த நன்மைகளுக்கு மட்டுமே உங்களை இரட்சிப்பதற்கு முடியும். இந்த அன்பு என்னும் செல்வத்தை நீங்கள் வளர்க்கும் பொழுது உங்கள் வாழ்கை இரட்சிப்பை அடையும். உதவி தேவையானவர்களுக்கொல்லாம் நீங்கள் உதவி செய்யுங்கள். வறுமையில் இருப்பவர்களுக்கு நீங்கள் சேவை செய்யுங்கள் இவையொன்றும் இல்லாமல் இறை அன்பினை பெறலாம் என எண்ணுவது முற்றிலும் முட்டாள் தனம். உங்களின் இரட்ச்சிப்புகாக முடிவில் உதவியாக இருப்பது என்னவென்றால், அது உங்களின் அந்த தியாகம் மட்டுமாகும். உங்களை நித்தியமான உலகில் அழைத்து செல்வதும் அந்ததியாகம் மட்டும்தான்.

ஆகவே நீங்கள் எந்த நேரமும் தியாகம் புரிய தயாராக இருங்கள். தியாகம் வழியாக எல்லாம் பூர்த்தி செய்ய முடிந்து விடும். தியாகம் நிறைந்த நோக்கமில்லாமல் ஒருவருக்கு ஒருபோதும் அமைதியினை பெற முடியாது. உலக நாடுகள் அனைத்தும் அமைதிக்காக பிரார்த்தனை செய்கின்றனர். அமைதி...... அமைதி...... என்று அவர்கள் புகழ்பாடல் பாடுகின்றனர். ஆனால் அவர்கள் அமைதியினை அடைந்தார்களா? இல்லை! அவர்கள் துக்கத்திலும் துன்பத்திலும் மூழ்கிபோனார்கள். அமைதியின் ஊற்று உங்களுக்குள்தான் இருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுக்குள் பார்வையிடுங்கள். பின்னர் உங்களுக்குள் குடி கொள்ளும் இறைத்தன்மையினை கண்டு கொள்ளுங்கள். இறைவன் உங்களிடமே இருக்கின்றான். அவன் உங்களுக்குள் குடி கொள்ளும் போது, ஏன் இறைவனை நீங்கள் வெளியே தேடுகீன்றீர்கள்?

உங்களின் பொருள் மற்றும் அறிவை உங்களின் சக உயிரினங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பெற்ற அனைத்து செல்வங்களுக்கும் உரிமையாளர் இறைவனாவான். உங்களின் சுமைகளை இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். பணத்தை சரியான நிலையில் பயன்படுத்துங்கள். பணம் மற்றும் பௌதிக பொருள் வகைகளின் பின்னில் காத்திருக்க கூடாது. வலுவான நிலையில் நிரந்திரம் இறை எண்ணத்தில் இருங்கள். நீங்கள் மலைகளிலும், குகைகளிலும், காடுகளிலும் இறைவனைத் தேடி செல்லாதீர்கள். அவன் எப்பொழுதும் உங்களுடன் இருக்கின்றான். உங்களுடன் அன்பின் வடிவமாக

இறைவன் இருக்கும் பொழுது லௌகீகம் என்னும் சாத்தனுக்கு நீங்கள் இரையாகி வீடதீர்கள். இன்று அனைத்து பகுதிகளிலும் சாத்தானிய குணங்கள் முந்தி நிற்கிறது. தவறான வழிகள் மூலம் செல்வங்களை சேர்ப்பதில் மக்களுக்கு எந்த ஐயமும் இல்லை. இந்த உலகினை நீங்கள் விட்டு செல்லும் பொழுது உங்களுடன் உங்கள் நன்மைகள் அல்லது தீமைகள் மட்டுமே காணப்படும். அல்லாமல் நீங்கள் சேர்த்து வைத்த செல்வமல்ல. உங்களுக்கு தேவை, உங்களின் பசியினை போக்குவதற்கு சற்று உணவுகள் மட்டுமாகும்.

இந்த எளிதான ஆன்மீக செயல்களை தவிர்த்துக் கொண்டும், அன்பின் மகத்துவத்தை மறந்து கொண்டும் நீங்கள் அமைதி மற்றும் மகிழ்ச்சியினை தேடுவது லௌகீக விருப்பங்களை பின்பற்றுவதனாலாகும். செல்வம் உங்களுடன் என்றென்றும் நிலைத்திருப்பதில்லை. அது வரும், போகும். அன்பு என்னும் குணத்தை உங்களிடம் வளர்க்க வேண்டும். அனைவரையும் நேசிக்கவேண்டும். எவரையும் பகைக்காமல் இருக்கவேண்டும். எதுவொன்று நிகழ்ந்தாலும் அது உங்களின் நன்மைக்காகவே நிகழ்ந்தது என்ற நம்பிக்கையினை நீங்கள் வளர்க்க வேண்டும். உங்களின் துக்கம் மற்றும் துயரத்திற்கு காரணமாக இருப்பது நீங்களேதான். பிறரை மதித்து கொள்ளுங்கள் அதுவே உங்களுக்கு பாதுகாப்பு நீங்கள் எவருக்காவது தீங்கிழைத்தால், அதற்கான தண்டனையினை நீங்கள் அனுபவித்து விடுவீர்கள். மகிழ்ச்சியும் வேதனையும் உங்களுடைய படைப்புதான். நீங்கள் செய்யும் தவறுகள் ஒரு நிழல் போன்று உங்களை பின் தொடர்ந்து வரும். மனிதர்கள் இன்று, பிறமக்கள் செவிசாய்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மட்டும் சொற்பொழிவுகள் ஆற்றுகின்றனர். ஆனால் அக்கருத்திற்கு ஏற்றவாா் அவர்கள் செயல்படுவதில்லை. இத்தகைய அறிவுரைக்கு என்னவிலை? இது ஒரு வஞ்சனையாகும். நீங்கள் வாசிக்கும் நீங்கள் கவனிக்கும் இத்தகைய போதனைகளை நீங்கள் செயல்முறையில் கொண்டு வராமல் இருந்தால், அதில் எந்த பயனும் இல்லை. சிறிய நிலையிலானலும் உங்கள் சக உயிரினங்களுக்கு நீங்கள் உதவி புரியுங்கள். அது உங்களுக்கு ஒரு பாதுகாப்பு கேடயமாக அமையும். நீங்கள் சந்திக்கும் துன்பங்களுக்கு நீங்கள் பிறா் மீது பழியினை சுமத்திக் கொள்ளதீர்கள். எவரையும் விமா்சனம் செய்யாதீர்கள் எல்லோரிடத்திலும் அன்பாக இருங்கள். அனைத்து மக்களையும் உங்களின் சகோதர, சகோதரிகளாக எண்ணுங்கள். மானிட குல சகோதரத்துவத்தை மேம்படுத்துங்கள். அன்பு என்னும் குணத்தை நீங்கள் வளா்ப்பதன் மூலம் உங்கள்

அந்தஸ்து மற்றும் பதவி உயர்ந்து விடும். அன்புக்கு மட்டுமே உங்களை காப்பாற்ற முடியும். நாவினை உங்களுக்கு அளித்திருப்பது இறைவனை புகழுவதற்காகும், பிறரை விமர்சிப்பதற்கல்ல. இந்த உயரிய செல்வம் உங்களுடன் இருக்கும் பொழுது எதற்கு நீங்கள் கவலையடைகின்றீர்கள்? உங்கள் கல்வி மற்றும் அறிவினைக் கொண்டு நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து வேலைகளும் இறை வேலைகள் என எண்ணுங்கள். அது இறைவனுக்காக புரியும் சேவை என எண்ணுங்கள். **“எல்லா செயல்களும் எனக்காக (இறைவன்) அற்பித்துக் கொள்ளுங்கள் என்னிடம் மட்டும் அடைக்கலம் தேடுங்கள்”.** ஆகவே நீங்கள் உங்களின் அனைத்து செயல்களையும் இறைவனுக்காக மட்டும் சமர்பித்துக் கொள்ளுங்கள். அவ்வாறேயானால் நீங்கள் அமைதியினை பெறுவீர்கள் (இன்ஷா அல்லாஹ்)

அல்லாஹ் உங்கள் அனைவர்கள் மீதும் அருட்கொடைகளை பொழிவானாக! இந்த ஜுமா நாளினை அவன் நமக்கு அருள் நிறைந்த நாளாக மாற்றிவிடட்டும். உங்கள் ஒவ்வொருவருடைய மீதும் அல்லாஹ் தனது அருளினை இறக்கட்டும்! இறைவழிபாடுகளின் பலனை அவன் நமக்கு தந்தருளட்டும்! அல்லாஹ்வின் மீதான உங்கள் நம்பிக்கை வலுவாக அமையட்டும், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்தவர்களிடமும், மற்றனைத்து மனித சகோதர-சகோதரிகளிடமும் உள்ள அன்பினை முறைப்படி தக்கவைத்து வாழ்வதற்கான உதவியினை அவன் உங்களுக்கு அளித்து அருள் புரியட்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**